ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2010/18 - 2017 මාර්තු මස 14 වැනි අඟහරුවාදා - 2017.03.14

*2010/18 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பூக்கள், அழகுத்தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை பயிர்செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்குமான தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதிய 1916/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் பிரகாரம் தொழில் ஆணையாளர் எம். டி. சாந்தனி அமரதுங்க ஆகிய நான் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் பூக்கள், அழகுத்தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை பயிர்செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கான நாளாந்த வேலை தொடர்பாக இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் கூறப்பட்டுள்ள நாளாந்த வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதங்களை நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

உத்தேசத் தீர்மானத்திற்கான ஆட்சேபணைகள் 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரைக்கும் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணைகள் ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றை கொண்டிருத்தலும் வேண்டும்.

எம். டீ. சி. அமரதுங்க,
தொழில் ஆணையாளர் நாயகம்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05.
2017.03.10.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

பூக்கள், அழகுத்தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை பயிர் செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கு ஏற்புடைத்தான நாளாந்த வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதங்கள் கீழ் குறிப்பிட்டவாறாதல் வேண்டும்.

| *வேலையாளர் வகை* | *ஆகக் குறைந்த நாட்சம்பளம்* |
|---|---|
| தேர்ச்சியுடையோர் | *ரூபா 500.00* |
| ஓரளவு தேர்ச்சியுடையோர் | *ரூபா 460.00* |
| தேர்ச்சியற்றோர் | *ரூபா 400.00* |

*03 - 1188*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*